**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 241 /2024 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு.முனியய்யா |
| Father's/Husband Name | | திரு. ராமன் |
| Village | | இடையாத்தி, வடக்கு |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 35/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 4th day of August 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற இரண்டாம்நிலை காவலர் 1375 மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் பட்டுக்கோட்டை தாலுக்கா இடையாத்தி வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் ஜவுளிவியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். ஆஜர் 1ம் எதிரி பெரியசாமி எனது அண்ணன். 2ம் எதிரி எதிரி ராமன் எனது அப்பா. எங்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கு இடையே மில், டீக்கடை பாத்தியம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. நான் இது சம்மந்தமாக கடந்த 04.11.2019 ந் தேதி ஊருக்கு வந்து ஆஜர் எதிரிகளுடன் பேசினேன். அவர்கள் பிரித்து தரமுடியாது என்று கூறினார்கள். மேலும் என்னை அசிங்கமாக பேசினார்கள். எனவே இது சம்மந்தமாக கடை மற்றும் மில்லை பூட்டிவிட்டு பிரச்சனையை பேசி முடித்துவிட்டு திறந்துக்கொள்ளாம் என்று கூறினேன். மறுநாள் காலை 05.11.2019 தேதி காலை 6.00 மணிக்கு எதிரிகள் இருவரும் டீக்கடையை திறந்து வியாபாரம் பார்த்தார்கள். நான் அன்றைய தினம் 6.30 மணியளவில் டீக்கடைக்கு சென்று எதிரிகள் இருவரையும் பார்த்து பிரச்சனை முடிப்பதற்குள் எதற்கு கடையை திறந்தீர்கள் என்று கேட்டபோது என்

அண்ணான 1ம் எதிரி பெரியசாமி குச்சிகாரி, தேவடியா மகனே என அசிங்கமாக பேசி அங்கிருந்த கட்டையை எடுத்து என் தலையில் அடித்தார்கள், அங்கு டீ குடித்துக்கொண்டிருந்த செல்லையா முத்துசாமி, பெரியசாமி ஆகியோர்கள் அவன் பங்கை தான் கேட்கிறார் எதற்கு அடிக்கீர்கள் என்று கேட்டதற்கு உனக்கு எங்கடா சொத்து இருக்கு என்று கேட்டு என் அண்ணன் பெரியசாமி பாய்லரில் இருந்த சுடுதண்ணீரை பிடித்து என் மீது ஊற்றினார். என் அப்பா ராமன் தேவடியா மகனே உனக்கு சொத்தும் கிடையாது ஒன்னும் கிடையாது ஓடுடா என்று சொல்லி கையால் அடித்தார். பின்பு பெரியசாமி பாயிலரில் இருந்த இரும்பு தட்டை எடுத்து இத்தோடு ஓடுடா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார். பின்பு என் நண்பர் வடிவுகரசன் என்பர் உதவியுடன் நான் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்பு அங்கு விசாரணைக்கு வந்த வாட்டாத்திக்கோட்டை போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>மறு விசாரணை இல்லை</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை